**STARTING TIME 11.10 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 06/2025**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 24.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **குணசேகரன்** Father's Name :

Address :

Calling : Age :

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

13. தெய்வானை என்பவர் யார் என்றால், எனது தங்கை ஆவார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 15.03.2013 அன்று எனது தகப்பனார் எனது தங்கை தெய்வானை பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் என்றால், சரிதான். அந்த ஆவணத்தில் நான் 4 வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 15.03.2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் **பி.வா.சா.ஆ–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. ராஜம்மாள் என்பவர் எனது மற்றொரு சகோதரி என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடந்த 15.03.2013 அன்று எனது தகப்பனார்

எனது சகோதரி ராஜம்மாள் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் என்றால், சரிதான். அந்த ஆவணத்திலும் நான் 4 வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 15.03.2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் **பி.வா.சா.ஆ–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. பி.வா.சா.ஆ–1 முதல் 4 வரையான செட்டில்மெண்ட் ஆவணங்களை எனது தகப்பனார் எழுதி வைத்ததில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால், செட்டில்மெண்ட் எழுதி வைப்பதாக சொன்னதால், சாட்சி கையெழுத்து செய்தேன்.

16. 15.03.2013 தேதியில் எனது தகப்பனார் மொத்தம் 5 செட்டில்மெண்ட் பத்திரங்களை எழுதி வைத்தார் என்றால், சரியல்ல, 4 ஆவணங்களை மட்டும் தான் எழுதி வைத்தார். அந்த 5 ஆவணங்களும் அடுத்தடுத்த பதிவு எண்களை கொண்டுள்ளது என்றால், சரியல்ல. அதில் 4 ஆவதாக பதிவு எண் கொண்ட ஆவணம் 1ம் பிரதிவாதி வளர்மொழி பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் என்றால், சரியல்ல, உயில் சாசனம் எழுதுவதாக தான் சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் 15.03.2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் என் தகப்பனார் எழுதி வைத்த ஆவணம் என்றால், உயில் என்று சொல்லி தான் அந்த ஆவணத்தை எழுதி வைத்தார்கள். அந்த ஆவணத்தில் நான் 6 வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால், சரிதான். 15.03.2013 தேதியிட்ட ஆவண எண் 2336/2013 ல் பக்கம் எண் 8–ல் உள்ள 6 வது சாட்சி கையெழுத்து மட்டும் **பி.வா.சா.ஆ–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. எனது தகப்பனார் பொறுப்பானவர் மற்றும் அறிவாளி என்பதால் தான் அவரது மகன்களான நாங்கள் எதிர்காலத்தில் பிரச்சனை செய்வோம் என்பதை முன்கூட்டியே அறிந்து அனைத்து ஆவணங்களிலும் அனைத்து மகன்களிடமும்

சாட்சி கையெழுத்து பெற்றுள்ளார் என்றால், சாட்சி கையெழுத்து செய்தது உண்மை, ஆனால் வளர்மொழி பெயரில் உயில் மட்டும் தான் எழுதி வைத்தார்.

18. எனது தகப்பனாருக்கு உடல்நலம் சரியில்லாத சமயத்தில், அவரை வற்புறுத்தி 2013 ம் ஆண்டு எழுதிய உயில் சாசனத்தை ரத்து செய்வதற்கான வழக்கை 2018 ம் ஆண்டு தாக்கல் செய்ய வைத்துள்ளோம் என்றால், சரியல்ல. எனது தகப்பனாரை வற்புறுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்த காரணத்தினால் தான் அவர் உயிருடன் இருந்த வரை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க முன் வரவில்லை என்றால், சரியல்ல. வழக்கின் விசாரணைக்கு இறுதி வாய்ப்பு கொடுத்தும் கூட எனது தகப்பனார் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால், சரியல்ல.

19. என் தகப்பனார் சுய நினைவுடனும், யாருடைய வற்புறுத்தல் இன்றியும் கடந்த 15.03.2013 அன்று ஆவண எண் 2336/2013– என்ற செட்டில்மெண்ட் பத்திரத்தை 1 ம் பிரதிவாதி பெயரில் எழுதி கொடுத்து அதே தினம் சுவாதீனமும் ஒப்படைத்துள்ளார் என்றும், என் தகப்பனார் காலமாவதற்கு முன்பு நாங்கள் 1 ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த சொத்துக்களைப் பொறுத்து 2 ம் வாதி பெயரில் மோசடியாக ஒரு பதிவு செய்யப்படாத உயில் சாசனத்தை தயாரித்துள்ளோம் என்றால், சரியல்ல. எனவே, செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு அந்த சொத்துக்களில் எனது தகப்பனாருக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில், அதே சொத்துக்களைப் பொறுத்து மீண்டும் உயில் எழுதி வைக்க என் தகப்பனாருக்கு உரிமையே இல்லை என்றால், சரியல்ல.

20. மேலும், எனது தகப்பனார் கடந்த 15.03.2013 அன்று 1 ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டுமானால், 3 ஆண்டு காலத்திற்குள் ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யாமல், காலம் கடந்து எங்கள் தகப்பனாரை

வற்புறுத்தி அவர் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், வழக்கு காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வகையில் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. அதே போல் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 25/2025–ல் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME: 11.37. A.M.**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub Court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**